# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.340/2017 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா– 01 ( PW– 01 ) |
| பெயர் | :- | சாவித்திரி |
| தேதி | :- | 10–03–2026 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**03–ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்குச் சொத்துக்கள் எந்தெந்த புல எண்களில் உள்ளன என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் நினைவில் வைத்து சொல்ல முடியாது. வழக்குச் சொத்துக்கள் நகர புல எண் 14/4, 16/3, 14/3 ஆகியவற்றில் உள்ளது என்றால் எனக்குத் தெரியவில்லை. வழக்குச் சொத்து பூர்வீக சொத்து இல்லை என்றும் தனிப்பட்ட சொத்து என்றும் சொன்னால் சரிதான். என் பெற்றோர், சகோதரர்கள் சேர்ந்து வாங்கிய சொத்து என்றால் சரிதான். அந்த சொத்து மேற்சொன்னவர்களின் சுய சம்பாத்திய சொத்து என்பதால் அதில் பாகம் கேட்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

நான் 01 முதல் 03 வரையிலான வாதிகள் சகோதரிகள் என்றால் சரிதான். 04-ஆம் வாதி ஜெயந்தி இறந்துபோன என் சகோதரி பாக்கிலட்சுமியின் மகள் என்றால் சரிதான்.

எங்களுக்கு சுமார் 40 ஆண்டுகளுக்குமுன் திருமணம் நடந்தது என்றால் சரிதான். நானும் என் சகோதரிகளும் விருதுநகர் பகுதியில்

திருமணம் செய்துகொடுக்கப்பட்டோம் என்றால் சரிதான். அந்த ஊர் சேலம் ஊரில் இருந்து சுமார் 300 கி.மீட்டருக்கு அதிகமான தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். 02-ஆம் வாதி தூத்துக்குடி ஊரில் உள்ளார் என்றால் சரிதான். அந்த ஊர் சேலம் ஊரில் இருந்து சுமார் 400 கி.மீட்டர் தூரத்தில் இருக்கும் என்றால் சரிதான். 03-ஆம் வாதி தனலட்சுமியின் கணவர் வீடு உள்ள கோவில்பட்டி சேலம் ஊரில் இருந்து சுமார் 300 கி.மீட்டர் தூரத்தில் இருக்கும் என்றால் சரிதான். 04-ஆம் வாதி ஜெயந்தியின் தாயார் ஊர் கோவில்பட்டி என்றால் சரிதான்.

பாக்கியலட்சுமி 12.08.2017-ஆம் தேதியன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். பாக்கியலட்சுமிக்கு பாஸ்கர், சந்துரு, பாலமுருகன், சுமதி, ஜெயந்தி, மஞ்சுளா ஆகியோர் பிள்ளைகள் என்றால் சரிதான். அவர்களுக்கும் வழக்குச் சொத்தில் உரிமை உண்டா என்றால் உண்டு. அவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

வழக்குச் சொத்தின் சுவாதீனத்தில் நாங்கள் ஒருபோதும் இருந்ததில்லை என்றும் வழக்குச் சொத்து எங்கு உள்ளது என்றே எங்களுக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. எங்கள் பெயரில் வழக்குச் சொத்து சம்மந்தமாக வருவாய் ஆவணங்கள் எதையும் தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல. கூட்டு சுவாதீனத்தில் நாங்களும் உள்ளோம் என்று இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் வழக்கு காலவரம்பீட்டு சட்டத்தால் தடைசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

நாங்கள் திருமணம் ஆன பிறகு கணவர் வீட்டில் வசிக்கிறோம் என்றால் நான் சேலத்தில்தான் இருக்கிறேன். வழக்குச் சொத்தில் பாகம் வேண்டும் என்று 2017-ஆம் ஆண்டுதான் முதன்முதலில் கேட்டோம்

என்றால் சரிதான். அருணாச்சல நாடாரின் மகள் என்ற முறையில் அவருடைய தனிப்பட்ட சொத்தில் பாகம் கேட்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

வழக்குச் சொத்தை 03.12.1986-ஆம் தேதியன்று அருணாச்சலம், அவருடைய மனைவி காமாட்சி, அண்ணன் ராஜமாணிக்கம், தம்பி குமார் ஆகியோர் பெயரில் வாங்கினர் என்றால் என் தகப்பனார் வாங்கி அவ்வாறு எழுதினார். பத்திரத்தில் நால்வர் பெயரும் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தில் மேற்சொன்ன ஒவ்வொருவருக்கும் தலைக்கு ¼ பங்கு சொந்தம் என்றால் சரிதான். இந்த வழக்கு தொடுக்கப்பட்டபோது அருணாச்சலமும் காமாட்சியும் உயிரோடு இல்லை என்றால் சரிதான்.

அருணாச்சலம் 20.04.1988-ஆம் தேதியன்று இறந்தார் என்றால் சரிதான். அவர் இறந்த பிறகு என் தாயாரும் இரு சகோதரர்களும் வழக்குச் சொத்தை வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்துகொண்டனர் என்றால் இல்லை. அதை தழுவி 28.12.1993-ஆம் தேதியன்று பாககூர்சீட்டு எழுதிக் கொண்டனர் என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் யார் கையெழுத்து உள்ளது என்றால் அந்த ஆவணம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. எனக்கு அதுப் பற்றி தெரியும் என்றும் தெரியாது என்று இந்த வழக்கிற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

(தரப்பினர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge, Salem.